[illegible] பத்து

Registered as a News Paper

26 MAR 1999
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 பங்குனி 12 வெள்ளிக்கிழமை (26-03-1999) UTHAYANA Lively National Tamil Daily கதிர் 102

## மன்னார் நகரப் பகுதியில் பொலீஸார் மீது தாக்குதல்

### இருவர் உயிரிழப்பு; ஒருவர் காயம்

மன்னார் நகரின் பிரதான வீதியில் உள்ள சின்னக்கடைப் பகுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு பொலீஸார் உயிரிழந்தனர்; ஒருவர் காயமடைந்தார்.

வீதி ரோந்தில் பொலீஸார் ஈடுபட்டிருந்த சமயம் தாக்குதல் நடத்தப்பட்டது.

பொலீஸாரைத் தாக்கிவிட்டு விடுதலைப் புலிகள் தப்பிவிட்டனர் என்றும்—

காயமடைந்த மூவரும் மன்னார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட சமயம் ஒருவர் உயிரிழந்தார் என்றும்—

மற்றவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட சமயம் மரணமானார் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து நகர் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

## முல்லைத்தீவுப் பகுதியில் கண்டனப் பேரணிகள்

### தாக்குதல்களைக் கண்டித்து

வவுனியா, மார்ச் 26

வன்னியில் தொடரும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் மற்றும் பொருளாதாரத் தடை ஆகியவற்றைக் கண்டித்து முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுக் காலை இரு பெரும் கண்டனப் பேரணிகள் இடம்பெற்றன என்று வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

முள்ளியவளை கரைதுறைப்பற்று வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி கரைதுறைப்பற்றில் ஆரம்பித்து முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் முடிவடைந்தது.

அங்கு நடந்த மாபெரும் கூட்டத்தையடுத்து முல்லைத்தீவு அரச அதிபர், ஐ. நா. செயலளர் நாயகம் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

(10ஆம் பக்கம் பார்க்க

# நிரந்தர பயணிகள் கப்பல் சேவை

# மே மாதம் முதல் நடத்துவதற்கு முடிவு

## செஞ்சிலுவைக் குழு வழித்துணை வழங்கும்

கொழும்பு, மார்ச் 26

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் மே மாதம் முதல் நிரந்தர பயணிகள் கப்பல் சேவையை அத்தியாவசிய சேவைகள் நாயகம் திணைக்களம் நடத்தவிருக்கின்றது.

இந்தச் சேவைக்குச் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வழித்துணைப் பாதுகாப்பை வழங்கும்.

கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் இந்த விவரங்கள் வெளியிடப்பட்டன.

வடக்கு நிலைமை குறித்து ஆராய ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி தலைமையில் இந்த உயர்மட்ட மாநாடு நடத்தப்பட்டது.

இந்த மாநாட்டில் வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தன, வடக்கு மாவட்ட அரச அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 1,200 பயணிகளுடன் லங்கா முடித்த வருகிறது

திருகோணமலை, மார்ச் 26

திருகோணமலையில் இருந்து ஆயிரத்து 200 பயணிகளுடன் 'லங்கா முடித்த' கப்பல் இன்று காங்கேசன்துறை நோக்கிப் புறப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாளை காங்கேசன் வரும் இக்கப்பல் இங்கிருந்து பயணிகளை ஏற்றிச் செல்லுமா என்பது தொடர்பான அறிவித்தல் எதுவும் நேற்று இரவு வரை தமக்குக் கிடைக்கவில்லை என்று யாழ். சிவில்நிர்வாக அலுவலக அதிகாரிகள் தெரிவித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கடலேரியில் மீன்பிடிக்க நேற்று அனுமதி இல்லை

குருநகர், மார்ச் 26

யாழ். கடலேரிப் பகுதியில் நேற்றைய தினம் மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

நேற்று அதிகாலை கடலேரிப் பகுதியில் வெடிச் சத்தங்கள் கேட்டதை தொடர்ந்தே மீனவர்கள் கடலுக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

(இ-6-36-173-51)

## 2 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 26

நல்லூர், அரியாலைப் பகுதிகளில் இரு இளைஞர்கள் நேற்றும் நேற்று முன்தினமும் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவில் உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரியாலை மேற்கைச் சேர்ந்த மகாதேவன் மதிவதனன் (வயது 24), அரசடி வீதி நல்லூரைச் சேர்ந்த பத்மநாதன் அசீஸ் (வயது 17) ஆகியோரே படையினரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

(இ-5-173)

## கட்டளைத் தளபதிகள் இருவருக்கும் பதவி உயர்வு

கொழும்பு, மார்ச் 26

யாழ். மாவட்டத்தின் இரு படையணிகளின் கட்டளைத் தளபதிகளும் மேஜர் ஜெனரல்களாக ஜனாதிபதியால் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

வலிகாமம், தீவகம் ஆகிய பகுதிகளுக்கான 51 ஆவது படையணியின் கட்டளைத்தளபதியான பிரிகேடியர் நிஹால் மாரம்பேயும்—

தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளுக்கான 52 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் நந்தா மல்லவராச்சியும்— மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் பிரிகேடியர்களான சுசில் சந்திரபால, தயா விஜயசூரிய, காமினி குணசேகர ஆகியோரும் மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (இ-3)

## யாழ்., நல்லூர் பகுதிகளில் இன்றுமுதல் 3 நாள்களுக்கு ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இன்று முதல் மூன்று நாள்களுக்கு இரவு நேர ஊரடங்கு ஒரு மணித்தியாலத்தால் தளர்த்தப்படுவதாக பலாலி இராணுவ தலைமையகம் நேற்று அறிவித்தது.

குருத்தோலை ஞாயிறு தினத்தையொட்டி யாழ் - திருமறைக்கலாமன்றம் ஏற்பாடு செய்துள்ள 'குருதி கழுவிய குவலயம்' என்னும் நிகழ்ச்சி இன்று முதல் மூன்று நாள்கள் மாலை 6-30 மணிமுதல் நடைபெறுவதையொட்டியே ஊரடங்கு ஒரு மணித்தியாலம் தளர்த்தப்பட்டு 10-00 மணி முதல் அமுல் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## செம்மணி விசாரணை இன்று யாழ். நீதிமன்றில்

யாழ்ப்பாணம், மார்ச் 26

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான இரகசியப் பொலீஸாரின் மனு மீதான விசாரணை இன்று யாழ். நீதிமன்றத்தில் நடைபெறவிருக்கின்றது.

யாழ். மேலதிக நீதிவான் என். அருள்சாகரன் இந்த மனு மீதான விசாரணைக்காக கொழும்பில் இருந்து வரவிருக்கிறார்.

செம்மணியில் மனிதப் புதைகுழி இருப்பதாகக் கருதப்படும் பகுதிகளில் இருந்து எடுக்கப்பட்ட மண் பரிசோதனை தொடர்பான மண்ணியல் நிபுணர்களின் அறிக்கை இன்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் மற்றும் இரகசியப் பொலீஸார் இன்று நீதிமன்றத்தில் சமுகமளிப்பர்.

(இ-3)

## தமிழ்க் கைதிகளின் விசாரணையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 26

களுத்துறை, வெலிக்கடைச் சிறைகளில் உள்ள தமிழ்க் கைதிகளின் விசாரணைகளைத் துரிதப்படுத்த மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பணிகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள அந்த ஆணைக்குழு அதிகாரியான எஸ். சிறீதரன் களுத்துறை, வெலிக்கடைச் சிறைச்சாலைகளுக்குச் சென்று கைதிகளின் விபரங்களைச் சேகரித்தார்.

இது தொடர்பாக அவர் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலீஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கல்வித் திணைக்களம்
நடத்தும்
## முறைசாராப் பயிற்சிநெறி

**யா/ஞானாசாரியார் கல்லூரி**
கரவெட்டி

**பயிற்சி நெறி**
**தலையலங்காரக் கலை**

(காலம் 15—4—99 —- 31—11—99 வரை)
மேற்படி பயிற்சி நெறியில் சேர விரும்புவோரும், போதனாசிரியர்களாகக் கடமையாற்றத் தகுதியுடையோரும் பாடசாலைக் காரியாலயத்தில் விண்ணப்பங்களைப் பெற்று **30—3—99** க்கு முன் சமர்ப்பிக்கவும்.

அதிபர்.

ஞானாசாரியார் கல்லூரி,
கரவெட்டி.
(சி/6915)

## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி கல்வித் திணைக்களத்தின்
ஆசிரியப் பயிற்சி நெறியாளர்
திரு. க. சச்சிதானந்தம்
அவர்களது அன்புத் தாயார்

திருமதி
**கந்தையா தங்கமுத்து**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வடமராட்சிக் கல்வி வலயம்.

புலோலி.
(சி/6912)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரா நடேசு ஜெகதீஸ்வரன்
## (மகேந்திரம்)

தோற்றம்: 14—02—1964
மறைவு: 17—03—1997

திதி: 26 — 03 — 1999

நிலையாக எம் நெஞ்சில்
ஒளிவீசும் மகன் நீயே
நீ நிழலாக எம் நினைவில் வருவாயே
மலர் போன்ற உன் தோற்றம்
எம் மண்ணில் மீண்டும் மலராக
மலரும் நாள் எப்போது?
ஆண்டு பல சென்றாலும்
ஆறாது உன் நினைவு.

உன் பிரிவால் துயருறும்

**அன்பு அப்பா, அம்மா**
**அக்கா - ஜெகதீஸ்வரி**
**அண்ணா - விக்கினேஸ்வரன்**
**தங்கை - பாமினி**
**தம்பிமார் வனராஜ் [லண்டன்] ஜெயகோபி [வவுனிக்குளம்]**
**பிரபாகரன் [லண்டன்] சுரேசன, சுபேந்திரன் [டோகா]**
மச்சான்மார் - **தெய்வேந்திரம், சிவலோகநாதன்**
மச்சாள்மார் - **ரேவதி, வத்சலா [லண்டன்]**
**கலாவதி [வவுனிக்குளம்]**
மருமக்கள் - **அகிலன், சயந்தினி, ரஜீதா, அனுசன்**
மக்கள் - **அஜந்தன், மிதுஜா, துலக்சனா [லண்டன்]**
**கௌசிகா, துலக்சன் [வவுனிக்குளம்]**

அரசடிச் சந்தி,
மானிப்பாய்.
(64208)

## குருபூசை

யாழ்ப்பாணம், மார்ச் 26
கொழும்புத்துறையில் உள்ள யோகர் சுவாமிகளின் சமாதியில் சுவாமிகளின் குருபூசை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் நடைபெறும்.
(இ-3)

## NEW SCIENCE COLLEGE

**கன்னாதிட்டி,**
**யாழ்ப்பாணம்.**

**கணக்கீடு**

ஆசிரியர்: **திரு. சி. தவா**
**வங்கிக் கணக்கிணக்க கூற்று**
ஆரம்பம்: 26 - 03 - 99
வெள்ளி 4-00 p m.
(64210)

## புலமைப் பரிசில் 1999

**30 ஆவது பரீட்சையில்**
**அதிகூடிய புள்ளி பெற்றோர்**
சு. விஜா
யா/ சுண்டுக்குளி மக. கல்.
ஸ்ரீ யாதவன்
யா/ கந்தரோடை
தமிழ்க்கந்தையா வித்.
கி. சர்மியா
யா/ இ. ம. ஆ. பா.
பு. பிரசாந்
யா/ ஊரெழு கணேச வித்.
ப. நிரோஷன்
யா/ இ. ஆ. பா.
க. நிரோஷி
ஐ. ஆதவன்
யா/உரும்பிராய் சை.த.வி

**அடுத்த பரீட்சை:**
28 - 03 - 99

**BOND** யாழ் நகர்.
(64207)

## லிபேட்டி தியேட்டர்

**அச்சுவேலி**

இன்று முதல்

**கையளவு மனசு**

Part IV - V

காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)
FAX No. 070 - 212223
T P. 0094-70-212223
(63915)

## ராஜா

**யாழ்ப்பாணம்.**

**ராஜ்கிரன் - மீனா**
**ஸ்ரீவித்தியா - வடிவுக்கரசி**
**செந்தில் - கவுண்டமணி**
**மற்றும் பலர் நடித்த**

**Ⓤ என் ராசாவின் மனசிலே**

இன்று காட்சிகள்
10-30, 2-00, 5-00
(சி/6877)

## நாகம்ஸ்

**சுன்னாகம்.**

3 ஆவது வெற்றி வாரமாக
**விஜய், விஜயகாந்த், யுவராணி, கௌதமி**
நடித்த

## செந்தூரபாண்டி

புதிய நேரப்படி காட்சிகள்
11-00, 2-30

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை - 99

ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேற்படி பரீட்சையில் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் கீழ்க்காணும் முகவரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெறுக் கொள்ளலாம்.

**திரு. சண். தயாளன்**
**யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
யாழ்ப்பாணம்.
(சி/6905)

## மரண அறிவித்தல்கள்

திருமதி
### கந்தையா தங்கமுத்து

கண்டி பிரபல வர்த்தகர் வே. க. கந்தையா அவர்களின் துணைவியார் திருமதி கந்தையா தங்கமுத்து நேற்றைய தினம் 25- 3- 99 வியாழக்கிழமை வியாபாரி மூலை, பருத்தித்துறையில் காலமானார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்றைய தினம் பிற்பகல் 3. 00 மணிக்கு வியாபாரி மூலை மயானத்தில் நடைபெற்றன.
இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**வே. க. கந்தையா**
(கணவன்)

வியாபாரிமூலை.
பருத்தித்துறை.
(சி/6903)

### சின்னத்தம்பு சின்னத்துரை

உடுவிலைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பு சின்னத்துரை 24-3-99 அன்று காலமானார்.
அன்னார் அன்னலட்சுமி (பூமணி) யின் அன்புக் கணவரும் வசந்தமதி, சிவகுமாரன் (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையும், ஐயாத்துரை, பானுமதி (கனடா) ஆகியோரின் மாமனாரும் சிவக்ஷனின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25-3-99 நேற்று நடை பெற்றன.

தகவல்:
**மனைவி**

20, விதானையார் வீதி,
சுண்டுக்குளி.
(64211)

### பொன்னம்பலம் பாக்கியநாதன்

[ஓய்வூதியர் — யாழ். செயலகம்]

வடலியடைப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு திருமதி பொன்னம்பலம் தம்பதிகளின் கனிஷ்டபுத்திரன் பாக்கியநாதன் காலமானார்.
அன்னார் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், அகிலனின் [தற்காலிக விரிவுரையாளர், நுண்கலைத் துறை யாழ். பல்கலைக்கழகம்] அன்புத் தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [26-03-99] காலை 10-00 மணியளவில் அராலியில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பா. அகிலன்** [மகன்]
278, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

அராலி கிழக்கு,
வட்டுக்கோட்டை.
[64191]

### திருமதி மேரி அக்கினேஸ் அந்தோனிப்பிள்ளை

கரம்பன் கிழக்கு, ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் 120/7, காலி வீதி, தெகிவளையில் வசித்தவருமான திருமதி மேரிஅக்கினேஸ் (வயிலா) அந்தோனிப்பிள்ளை 18-03-99 அன்று பிரான்ஸில் காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற மாட்டீன் அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான கரம்பன் சந்தியாப்பிள்ளை, சூசைப்பிள்ளை ராசம்மா—ஆரோக்கியம் தம்பதிகளின் பாசமிகு மகளும் சாம் செல்வரட்ணம் (பிரான்ஸ்), சகாயமேரி மனோகரன் (பிரான்ஸ்), அன்ரன் ஜீவரட்ணம் (பிரான்ஸ்), அனிற்றா விஷ்ணுதாஸ் (பிரான்ஸ்), சேவியர் தவரட்ணம் (பிரான்ஸ்), ஆன் ஜஸ்மின் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பெனடிற்சிறில் (உரிமையாளர், லைடன் புடவை நிலையம், யாழ்ப்பாணம்), சிசிலியா சாளற் மரியநாயகம், பெடாமரியதாசன் (கொழும்பு), அருளானந்தம் டொமினிக் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29-03-99 திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**எஸ். பெனடிற்சிறில்**
(சகோதரன்)

27, சுவாட்ஸ் லேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(சி/6909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின் மற்றொரு கிரிக்கெட் மோதல்:

# இன்றும் நாளையும் நடக்கும் 'பொன் அணிகள் போர்!'

வலி. தென்மேற்கு, மார்ச் 26

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் — சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 'பொன் அணிகள் போர்'' (BATTLE OF THE GOLD) இன்றும், நாளையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 'பிக்னெல், மைதானத்தில் இடம் பெறும்.

இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பெரும் மோதல் 82 ஆவது தடவையாக இடம்பெறுகின்றது.

### யாழ்ப்பாணக் கல்லூரி அணி

யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் சார்பில் பங்குபற்றும் வீரர்களின் பெயர் விவரம் வருமாறு:

ஆர். குகன் (அணித்தலைவன்), ரி. ஹரிநியுட்டன் (உப-தலைவன்), எஸ். செந்தூரன், எம். பிரணவரூபன், கே. சதீஷ், எம். வசந்தகுமார், எஸ். நினிந்தரூபன், ஜி. பிரகாஸ், எஸ். சதீஷ், ஜி. லக்ஸ்மன், ரி. பிரணவதாஸ், ரி. துஷியந்தன், பி. வில்லியம் கபிரியேல், எஸ். தர்சன், டி. சுரேந்திரராஜ், ஏ. கிருபாகரன் ஆகியோரும்.

### சென். பற்றிக்ஸ் அணி

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் சார்பில் பங்கு பற்றும் வீரர்களின் பெயர் விவரம் வருமாறு:

பி. பார்த்தீபன் (அணித் தலைவன்), ரி. ஜெயராகவன் (உப-தலைவன்), ஜி. ஆர். தேவராஜன், ஜே. சி. பானுஜெயன், பி. தர்ஷன், ரி. ஜெயமுகுந்தன், எம். திவாகரன், ஆர். ருத்திரசேகரம், ஜி. அருள்ராஜ், ரி. யூட்அன்ரனியாஸ், எம். பிரசந்தா ஜோசப், எஸ். றொட்னி, ஏ. ஹரிகஜன், ஏ.ஆர். ஆர். பிகின், எஸ். போல்பிரதீப், எஸ். ஜெ. சி. நிருபாகர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் பயிற்றுநர் பி. எல். மோகனகுமார், விளையாட்டுத்துறை பணிப்பாளர் என். தற்பரானந்தன்.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பயிற்றுநர் பி ஜெயக்குமார், உடற்கல்வி ஆசிரியர் எஸ். சகாயராஜா. (ஐ-185)


## அறிவித்தல்

கட்டைவேலி - நெல்லியடி

### பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

46 (1) இன் கீழான விசாரணை

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களால் 1998 - 11 - 11 திகதிய கடித மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்,

1) 23 கிளைகளிலும் 1995 - 01 - 01 திகதிக்குப் பின்னர் உறுப்புரிமை பெற்றோரது தகவுடைமை.
2) 1998 - 08 - 01 திகதியில் நடைபெற்ற கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களிற்கு சமுகமளித்து வாக்களித்த உறுப்பினர் தகவுடைமை.
3) 23 கிளைகளினதும் கிளைக்குழுக் கூட்டங்கள் முறையாகக் கூட்டப்பட்டமை. அலுவலர் தெரிவு பேராளர் தெரிவு.
4) கிளைக்குழுக்களின் தெரிவின் பின்னரான முதற் பொதுக்கூட்ட நடைமுறைகள்

ஆகியவை பற்றிக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 46 (1) இன் கீழான விசாரணை ஒன்றினை நடத்த விசாரணை உத்தியோகத்தராக நியமனம் செய்யப்பட்டுள்ளேன்.

மேற்படி விசாரணை தொடர்பாக மேற்கூறிய 1, 2, 3, 4இற் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் மேற்படி சங்க அங்கத்தவர் எவரேனும் தகவல் தர விரும்பின் கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கத் தலைமைப் பணிமனைக்குக் 1999 மார்ச் மாதம் 29, 30, 31 ஆந் திகதிகளில் என்முன் தோற்றுமாறும் சங்கத் தலைமைப் பணிமனைக்கு குறித்த திகதியில் சமுகந்தர வசதியற்றவர்கள் யாழ்ப்பாணம் 18/10, வைமன் வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனைக்கு 1999 ஏப்ரல் மாதம் 7, 8, 9 ஆந் திகதிகளில் என் முன் தோற்றுமாறும் கேட்டுக்கொள்கின்றேன். நேரம் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை.

தபால் மூலம் தர விரும்புபவர்கள் பதிவுத் தபால் மூலம் திரு. சி. ஐயாத்துரை, விசாரணை உத்தியோகத்தர், கூட்டுறவுப் பணிமனை, 18/10, வைமன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 1999 - 04 - 10 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

சி. ஐயாத்துரை
விசாரணை உத்தியோகத்தர்

(சி/6896)


## ஒத்திவைப்பு

இம் மாதம் 28ஆம், 31 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த தொடர்கல்விப் பயிற்சி வகுப்புகள் ஏப்ரல் மாதம், 4 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு பிற்போடப்பட்டிருப்பதாக கரவெட்டி மத்திய நிலைய தொலைக் கல்விச் சிரேஷ்ட போதனாசிரியர் கு. தருமசிறிராஜா தெரிவித்துள்ளார். (ஐ-109)

## நூல் வெளியீடு

யாழ். இந்துசமயப் பேரவையின் செயலாளர் சி சக்திகிரீவன் எழுதிய 'சிவனருளமுதம்' என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மெய்யியற்றுறைத் தலைவர் பேராசிரியர் நா. ஞானகுமாரன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் பேராசிரியர் அ. சண்முகதாஸ். க. வை. சிற்றம்பலம், க. நா. சண்முகநாதபிள்ளை ஆகியோர் நிகழ்த்துவர்.

தொடக்கவுரையை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், நூலின் வெளியீட்டுரையை இந்து நாகரிகத்துறைத் தலைவர் [illegible] வர். (ஐ-7)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உருவாய் 18 — 08 — 1947

அருவாய் 06 — 04 — 1998

### அமரர் இராஜநாயகம் இராஜேஸ்வரன்

(Marketing Manager)

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்.

'சாந்திநிகேதன்'
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு.

(64150)

## B. A. Final (வெளிவாரி)

(யாழ் பல்கலைக்கழகம்)

விரிவுரைகள் ஆரம்பம் 27 - 03 - 99

### புதிய உயர் கல்லூரி

ஆரியகுளச்சந்தி, யாழ்ப்பாணம்.

(64196)

## இதய அஞ்சலி

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவரும் முன்னாள் தபால், தந்தி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான

### செல்லையா குமாரசூரியர்

அவர்களின் மரணச் செய்திகேட்டு மிகவும் துன்புற்றோம். பக்தர் குறை தீர்க்கும் பறாளாய்ப் பதியிலே ஈசுரவிநாயகரையும் முருகப்பெருமானையும் தன் நெஞ்சகத்தே கொண்டு தினமும் வழிபடுபவர். அதன் பேறாக காலத்துக்கேற்ற அரசியலைக் கைக்கொண்டு தமிழினத்தின் அரசியல் பொருளாதார சமூக முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டவர். தன்னாலான சேவைகளைக் குறைவின்றிச் செய்தவர். இவ்விதம் நாட்டுக்கும் மக்களுக்கும் அளப்பரிய சேவையாற்றியவரின் பிரிவு ஒரு பேரிழப்பாகும்.

இவர் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்க்கும், ஏனையோர்க்கும் ஈசுர விநாயகர் ஆறுதல் அளிப்பாராக!

இவரது ஆத்மா இறைபதம் கலந்து இன்புற்றிருக்க சர்வவல்லமை பொருந்திய ஈசுர விநாயகனின் பாதம் பணிகின்றேன்.

சோழியூரான் பிறைசூடிக்குரு
(சந்நதிப்பூசகரும் ஓய்வுபெற்ற ஆசிரியரும்)

ஈசுரவிநாயகர் தேவஸ்தானம்,
பறாளாய்,
சுழிபுரம்.

(64198)

நல்லூர்

## லயன்ஸ் கழகத்தை வாழ்த்துகிறோம்

புதிதாக எமது உருப்பிராய் மண்ணில் 28-03-98 இல் உரும்பிராய் லயன்ஸ் கழகத்தை

தனது 10 ஆவது ஆண்டில் அங்குரார்ப்பணம் செய்யும்

பிராந்தியம் 8 இன் மிகச் சிறந்த கழகமாக தெரிவு செய்யப்பட்டதும், சேவையின் அடிப்படையில் 15விருதுகளை 98 - 99 இல் சுவீகரித்துக் கொண்டதுமான நல்லூர் லயன்ஸ் கழகத்தையும் அக்கழகத்தின் வெற்றிக்கு வித்திட்ட தலைவர் லயன் பா. தவபாலன் அவர்களையும் கழக உறுப்பினர்களையும் மேலும் சிறந்தசேவைபுரிய உரும்பிராய் மக்களுடன் இணைந்து வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:

### ஷர்மிலா ரேடேர்ஸ்

உருப்பிராய் சந்தி, உரும்பிராய்.

பா (F)ன்ஸி பொருள்கள், சொக்கிலேட, பிஸ்கட் குளிர்பானம் மற்றும் பல சரக்கு, வீட்டுபாவனைப் பொருள்கள் களஞ்சியம்.

SHARMILA TRADERS.

(64201)

யாழ். பல்கலைக்கழக

## முகாமைத்துவ மாணவர் மன்றம்

நடத்தும்

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான

### வினாடி வினா போட்டிக்கான எழுத்துப் பரீட்சை - 1999

இடம்:- யாழ். இந்துக்கல்லூரி

காலம்:- 27. 03. 1999 மு ப 11 மணி [புதிய நேரம்]

மேற்படி போட்டிக்காக ஒவ்வொரு பாடசாலைகளிலும் இருந்து அதிபர்களினால் பெயர்ப்பட்டியல் அனுப்பப்பட்ட மாணவர்கள் குறித்த நேரத்திற்கு பரீட்சை மண்டபத்திற்கு சமூகம் தரவும்.

முகாமைத்துவ மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.

விளம்பர அன்பளிப்பு

SHOTOKAN KARATE - DO
INTERNATIONAL FEDERATION
A - RANJITH, SHAELINRAKUMAR
(Chief Karate Instructor)
Old police Station
Anaikkoddai

(64197)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

''மாணிக்கம்'' கொக்குவில் மேற்கு செல்வி காவேரி இரத்தினராசா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (765400619V, விசேட அடையாள அட்டை (D.C S அடையாள அட்டை) கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, இல்ல விளையாட்டு ''தாரகை'' இல்லத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பாடசாலையில் ஒப்படைக்கவும் (64183)

நாகேந்திரசர்மா கமலநாதன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (090402957) சென்ற வாரம் அராலி வடக்கில் இருந்து சித்தன்கேணிப்பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் கோயிலில் ஒப்படைத்து உதவவும். (64188)

திருமலையில் இருந்து யாழ். நகர் வந்த கப்பலில் பயணம் செய்த எனது பாக்' ஒன்று கடந்த 23 - 03 - 99 யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சிவலிங்கம், மோட்டோர்ஸ், 77 மானிப்பாய் வீதி, யாழ், என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (64184)

## கூட்டம்

யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சிக்கன கடன் வழங்கும் சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை சங்க கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது.

சங்கத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மேற்படி கூட்டத்தில் ஒன்பது உறுப்பினர்கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. (க-17)

## வீடு விற்பனைக்கு

இல. 193/3, அரசடி றோட், கந்தர்மடம் (இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்) என்ற முகவரியில் சகலவித வசதிகளுடன் கூடிய மேல் வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளும்முகவரி; 160, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம். (64062)

## புவியியல்

G.C E A/L G A.Q BA (Ext) வகுப்புக்கள் குழு வகுப்புக்களாக (Group Class) நடைபெறுகின்றன. 01—04—99 இல் இருந்து புதிய பிரிவுகள் சேர்த்துக் கொள்ளப்படும். இல. 60, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம் (64113)

## மணமகன் தேவை

விஸ்வகுல 41 வயதுடைய ஓர் அளவு படித்த அழகான் கிரகபாவ குற்றம் இலலாத பெண்ணுக்கு மணமகன் தேவை. ஜாதக விவரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல : 860மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (64187)

## தவறிவிட்டது

சரசாலை தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை பத்மநாதன் என்பவரின் காசோலை இல. 745739 சாவகச்சேரிக்கும் சரசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (64157)

பகீரதி நரேந்திரநாதன் என்பவரது விசேட அடையாள அட்டை (091027553) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்துபின் வரும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். நரேந்திரநாதன் பட்டுவில் தெற்கு, மருதங்குளம், சாவகச்சேரி. (64162)

## இலகு திருமண சேவை

1960 கொம்பியூட்டர், 1973 என்ஜினியர் மற்றும் 1969, 1973 U K வதிவு முகாமையாளர்கட்கும், 1959 சைவஉணவு, 1969 வியாபார முகாமை மணமகன்களுக்கு மணப்பெண்கள் தேவை. மணமக்கள் தேர்வுக்கு ஞாயிறு காலைகளில் வரவும் துரைவிமலா, கே. கே. எஸ். வீதி, யாழ். நாச்சிமார் கோயிலடி. (64189)

## G. A. Q [வெளிவாரி]

(பேராதனை)

★ மேற்கூறப்பட்ட பட்ட பாடநெறிக்கு பதிவு செய்வதற்குரிய பல்கலைக்கழகப் பதிவிற்குரிய விண்ணப்பப்படிவங்கள் வந்து சேர்ந்துள்ளன. விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பதிவுகளை 28 - 03 - 99 வரை செய்து கொள்ளலாம்.

★ A/L இல் 3 பாடங்களுடன் 180 – க்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்றவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பம்: 27 - 03 - 99 (காலை 8.00 மணி)

விவரங்களுக்கு:

S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம். [64195]

# அந்தியேட்டி அழைப்பு



## அமரர் செ. சண்முகராசா

(இளைப்பாறிய தொலைத்தொடர்பு அலுவலர்)

| தூலமுகிழ்ப்பு | தூல அவிழ்ப்பு |
|---|---|
| 1924 — 10 — 05 | 1999 — 02 — 25 |

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன் 1999 – 03 -27 அன்று இடம்பெறவுள்ள வீட்டுக் கிரியைகளிலும் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (64200)

உ

# விவாக சுப முகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் பங்குனி மாதம் 12 ஆம் திகதி (26 - 03 - 1999) வெள்ளிக்கிழமை காலை 9-15 மணி முதல் 10-30 மணி வரையுமுள்ள பூர்வபக்ஷ தசமி திதியும் புனர்பூச நக்ஷத்திரமும் சித்தயோகமும் இடபலக்கினமும் கூடிய சுப முகூர்த்தத்தில

★ ★ ★

காரைநகர் பக்தர்கேணி
அமரர்
பிரம்மஸ்ரீ மு. விசுவநாத ஐயர்
தம்பதிகளின்
பௌத்திரனும்
எமது ஜேஷ்ட புத்திரனுமாகிய
சிரஞ்சீவி
**வாகீசன்**
(ராஜன்) M. Sc
அவர்களுக்கு

காரைநகர் களபூமி
தன்னைப்பிள்ளையார் கோயில்
அமரர்
பிரம்மஸ்ரீ குமாரசாமி ஐயர்
தம்பதிகளின் பௌத்திரியும்
எமது புத்திரியுமாகிய
சௌபாக்கியவதி
**சுகன்யா**
(சுகந்தி) M. Sc.
அவர்களை

★ ★ ★

கன்னிகாதான திருமாங்கல்ய தாரண பாணிக்கிரகணம் செய்ய வவுனியா புளியடி சித்திவிநாயகர் பெருமானதும் கம்பளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி பெருமானதும் திருவருள் துணையுடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தம் கம்பளை ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமிகோவில் மண்டபத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் இஷ்டமித்திர குடும்பசமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

சமாவர்த்தனம் 29 - 03 - 99 அன்று காலை 5-00 மணியளவில் மேற்படி ஆலயத்தில் நடைபெறும்.

வரவேற்புபசாரம் 29 - 03 - 99 திங்கட்கிழமை மாலை 5-00 மணியளவில் மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

சுபம்

இங்ஙனம்

**ஸ்ரீ. வி. சுவாமிநாதன் இராஜேஸ்வரி தம்பதிகள்**
இல. 145 / 3A, அம்பகமுவ வீதி, கம்பளை.

**ஸ்ரீ. கு. கணேசக்குருக்கள் ஜெயலட்சுமி தம்பதிகள்**
51, குருமண்காடு, வவுனியா.

தங்கள் நல்வரவை நாடும்

ஸ்ரீ. V.ஜெகதீச சர்மா பானிப்பாய்
ஸ்ரீ P. பரமேஸ்வர சர்மா தம்பதிகள் கம்பளை
ஸ்ரீ P. கோபாலகிருஷ்ண சர்மா தம்பதிகள் யாழ்ப்பாணம்
ஸ்ரீ. B. பஞ்சநதசர்மா தம்பதிகள் பருத்தித்துறை
ஸ்ரீ B சிவராமகிருஷ்ண சர்மா தம்பதிகள் கொழும்பு

ஸ்ரீ K K. V. ஆனந்தசர்மா தம்பதிகள் மாவனல்ல
ஸ்ரீ. கு. சிதம்பரநாதக் குருக்கள் தம்பதிகள் கொழும்பு
ஸ்ரீ. கு. தியாகராஜசர்மா தம்பதிகள் நீர்வேலி
ஸ்ரீ ஸ்ரீனிவாச சிஹிவாகனக்குருக்கள் தம்பதிகள் கொழும்பு
ஸ்ரீ வி. வ. சிவகுமார குருக்கள் தம்பதிகள் மட்டக்களப்பு

(64194) (இருவீட்டார் அழைப்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

# கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கான அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. கைதடி சித்தமருத்துவத்துறையில் 50 மாணவிகளுக்கான விடுதி அமைத்தல்.
2. கைதடி சித்த மருத்துவத்துறையில் 50 ஆண் மாணவர்களுக்கான விடுதி அமைத்தல்.

கட்டட நிர்மாண வேலைகளுக்கான 'இக்ராட்' (ICTAD) நிறுவனத்தில் தரம்7 (M 7) அல்லது அதற்குமேற்பட்டபதிவை உள்ள ஸ்ரீலங்கா தேசியநிர்மாண ஒப்பந்தகாரர் சபையில் (NCCASL) அங்கத்தவராகவுள்ள ஒப்பந்தகாரர்கள் கேள்விப்பத்திரம் பெறத் தகுதியுடையவராவர்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளர் (குடிசார்) அவர்களிடமிருந்து 16 - 04 - 99 வரை ஒப்பந்தகாரர் பதிவுப்புத்தகத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

மீளளிக்கப்படாத வைப்புத் தொகை - 1, 000/-

மீளளிக்கப்படக்கூடிய வைப்புத் தொகை - 25, 000/-

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 29 - 04 - 99 காலை 10. 00 மணிக்குமுன் தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்பட வேண்டும்.

தேவைப்படின் கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப்பல்கலைக்கழகப் பராமரிப்புப் பகுதியில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றிக் கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

**கலாநிதி. க. குணராசா**
பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
தபால்பெட்டி இலக்கம் 57.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (சி/6894)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திச் சாரம்

### நாணயக் குற்றி தொலைபேசி

அரியாலை, மார்ச் 26

சுண்டிக்குழி மகளிர் கல்லூரிக்கு அருகில் யாழ். ரெலிக்கொம் நிறுவனத்தினால் நாணய குற்றித் தொலைபேசி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (ச-17)

### புனரமைப்பு

யாழ்ப்பாணம்: மார்ச் 26

சில்லாலை விவசாயிகள் சம்மேளனம் கடந்த ஜனவரி மாதம் புனரமைக்கப்பட்டு புதிய நிர்வாகத் தெரிவுகளும் இடம் பெற்றுள்ளது. இந்த நிகழ்வில் தொல்புரம் கமநல சேவைகள் பெரும்பாக உத்தியோகத்தர் குகதாசன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் அதிகாரி வி. கனகரட்டினம், ஆகியோர் கலந்து கொண்டனர். (க-6)

### இலவசமாக பால் வழங்கல்

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம் தினமும் இலவசமாகபால் வழங்கி வருகின்றது. (க -109)

### புகையிலை அறுவடை

நாவற்குழி, மார்ச் 26

கைதடி, நாவற்குழி பகுதிகளில் புகையிலைக் கன்றுகளை வெட்டி உவர்த்தும் பணி ஆரம்பிக்கப்பட்டு உள்ளது, இந்த வருடம் புகையிலைக் கன்றுகள் சுருட்டை என்னும் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகளுக்கு எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என விவசாயிகள் பலரும் கவலை தெரிவித்துள்ளனர். (க-102)

### அன்னதான மண்டபம்

நாவற்குழி, மார்ச் 26

கைதடி மேற்கு இணுங்கித் தோட்ட கந்தசுவாமி கோயிலில் 100 அடிநீளமான அன்னதான மண்டபம்ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (இந்த மண்டபம் இப்பகுதி அடியார்களின்உதவிய ல் கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க-102)

### திருத்தப்படாத வீதி

நாவற்குழி - கேரதீவு வீதியில் கோலிலாக்கண்டி சந்தியில் இருந்து தனங்கிளப்பு வரையான வீதி திருத்தப்படாது இருப்பதனால் இந்த வீதியால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பல இடர்களை சந்திக்க வேண்டியுள்ளது. (க - 102)

### சிரமதானம்

ஊர்காவற்றுறை கரம்பொன் பாலக்காடு சந்தியிலிருந்து நாரந்தனை செருக்கன் சந்திவரையும் போக்குவரத்து சேவைக்கு இடைஞ்சலாக வீதியின் இரு பக்கங்களிலுமுள்ள மரங்க', பற்றைகள் என்பன சிரமதானம் மூலம் வெட்டித்துப்புரவு செய்யப்பட்டது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இச்சிரம தானப்பணியில் கிராம அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (க-16)

# நாட்டின் 11 பல்கலைக்கழகங்களுக்கு 11,900 மாணவர் அனுமதிக்கப்படுவர்

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு 1,150 பேர்

யாழ்ப்பாணம், மார்ச் 26

நாட்டில் உள்ள 11 பல்கலைக்கழகங்களுக்கும் 1999/2000 ஆம் கல்வி ஆண்டுக்கு 11 ஆயிரத்து 900 மாணவர்களை அனுமதிக்க உத்தேசிக்கப்பட்டுளளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுக்குழு அறிவித்துள்ளது.

இந்த உத்தேச அனுமதி விவரத்தின்படி யாழ். பல்கலைக்கழகத்துக்கு ஆயிரத்து 150 மாணவர்கள் அனுமதி பெறவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு மேற்படி கல்வி ஆண்டுக்கு அனுமதிக்கென உத்தேசிக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை விவரம் துறை ரீதியாக வருமாறு:

மருத்துவம் — 100, விவசாய விஞ்ஞானம் 50, உயிரியல் விஞ்ஞானம் — 100, பௌதிக விஞ்ஞானம்—200, வணிகத்துறை — 150, முகாமைத்துவம் — 200, கலை — 300, பிரயோகவிஞ்ஞானம்—50.

நாட்டில் உள்ள சகல பல்லைக் கழகங்களுக்கும் அனுமதிக்கென உத்தேசிக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை விவரத்தைக் காட்டும் அட்டவணை வருமாறு:

### 1999/2000 கல்விஆண்டில் பல்கலைக்கழக அனுமதிக்காக உத்தேசிக்கப்பட்ட மொத்த இடங்களின் பகிர்வு

| பல்கலைக்கழகம் | மரு. | பல். | வில. | விவ. விஞ். | உயிரி. விஞ். | எந்தி. | புட. தொ. | பௌ. விஞ். | கண. விஞ். | நில அள. | முகா. | வணி. | சட். | கலை | கட். | கணி. அள. | பிர. விஞ். | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 190 | — | — | — | 125 | — | — | 190 | 50 | — | 100 | 165 | 200 | 550 | — | — | — | 1570 |
| பேராதனை | 175 | 75 | 75 | 200 | 150 | 320 | — | 280 | — | — | — | — | — | 600 | — | — | — | 1875 |
| ஸ்ரீ ஜெயவர்த்தனபுர | 150 | — | — | — | 80 | — | — | 100 | — | — | 615 | 180 | — | 500 | — | — | — | 1625 |
| களனி | 160 | — | — | — | 120 | — | — | 220 | — | — | 250 | 150 | — | 550 | — | — | — | 1450 |
| யாழ்ப்பாணம் | 100 | — | — | 50 | 100 | — | — | 200 | — | — | 200 | 150 | — | 300 | — | — | 50 | 1150 |
| உறுகுணை | 125 | — | — | 150 | 130 | 100 | — | 210 | — | — | — | 200 | — | 350 | — | — | — | 1265 |
| மொறட்டுவை | — | — | — | — | — | 400 | 50 | — | — | — | — | — | — | — | 50 | 50 | — | 550 |
| கிழக்கு | — | — | — | 50 | 75 | — | — | 75 | — | — | 50 | 50 | — | 150 | — | — | - | 450 |
| தென் கிழக்கு | — | — | — | | 30 | — | — | 30 | — | — | 50 | 55 | — | 150 | — | — | — | 315 |
| ரஜரட்ட | — | — | — | 100 | — | — | — | — | — | — | 100 | — | — | 100 | — | — | 240 | 540 |
| சப்ரகமுவ | — | — | — | 75 | — | — | — | — | — | 75 | 100 | — | — | 150 | — | — | 60 | 460 |
| விசே. பாட. | | | | | | | | | | | | | | 650 | | | | 650 |
| மொத்தம் | 900 | 75 | 75 | 625 | 810 | 820 | 50 | 1305 | 50 | 75 | 1465 | 950 | 200 | 4050 | 50 | 50 | 350 | 11900 |

மரு. — மருத்துவம்
பல். — பல்லறுவை
வில. — விலங்கு விஞ்ஞானம்
விவ. — விவசாயம், விவசாய விஞ்ஞானங்கள்
நில. அள. — நில அளவை விஞ்ஞானம்
விசே. பாட. — விசேட பாடங்கள்
எந். — எந்திரவியல் I, II
புட. தொ. — புடவை, துணி தொழில் நுட்பம்
பௌ. விஞ். — பௌதிக விஞ்ஞானம்
கண. விஞ். — கணனி விஞ்ஞானம்
கணி. அள. — கணிய அளவீடு
பிர. விஞ். — பிரயோக விஞ்ஞானம் [உயி/பௌதி/ஊட்டம்]
முகா. — முகாமைக் கற்கைகள்
வணி. — வணிகவியல்
சட். — சட்டம்
கட். — கட்டடக் கலை
உயிரி. விஞ். — உயிரியல் விஞ்ஞானம்

## மருதடி உற்சவம்

# ஆலயச் சுற்றாடலில் கடை அமைப்பதற்குத் தடை

வலிகாமம் தெற்கு, மார்ச் 26

இம்மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாக உள்ள மானிப்பாய் மருதடி விநாயகர் மஹோற்சவ காலத்தின் போது மானிப்பாய் பிரதான வீதிகளில் தற்போது அனுமதி பெற்று இயங்கிவரும் வர்த்தக நிறுவனங்களை விட புதிதாக— தற்காலிகமாக—எந்த ஒரு வர்த்தக நிலையமும் அமைப்பதற்கு அனுமதி அளிகச்ப் படமாட்டாது.

இம் மஹோற்சவத்தை முன்னிட்டு கடந்த 22 ஆம் திகதி திங்கட்கிழமை நடை பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஆலய நிர்வாகத்தினர், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினர், சுகாதாரப் பிரிவினர் மற்றும் தொண்டர் அமைப்பைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

உற்சவ காலத்தில் கடைகளை அமைக்க விரும்புவோருக்கு ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள வயல் வெளிகளில் இட ஒதுக்கீடு செய்து கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கடைகள் அமைப்பதற்கு விண்ணப்பித்தவர்களுக்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் இட ஒதுக்கீடுகள் வழங்கப்பட உள்ளன.

உற்சவ காலங்களில் சுகாதாரப் பகுதியினர் வேண்டிய சுகாதார ஒழுங்குகளை மேற்கொள்வர்.

இலங்கைப் போக்குவரத்து சபையினர் விசேடமாக பஸ் சேவையினை நடத்த சம்மதம் தெரிவித்துள்ளனர்.

வீதி ஒழுங்கு, கட்டுப்பாடு, நெறிப்படுத்தல், ஒழுங்குகளை சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினரும் சாரணர்களும் மேற்கொள்ள உள்ளனர்.

உற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சுற்றாடல் பகுதி சிரம தானப் பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி, மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களுடன் இணைந்து மானிப்பாய் பகுதி இந்து இளைஞர்களும் சிரம தானப் பணியில்ஈடுபட்டு வருகின்றனர். (ஐ-152)

## கண்தான விழிப்புணர்வு

பாடசாலைகள் மட்டத்தில் கண்தானம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியதாக அனைத்துப் பாடசாலைகளிலும் கண்தான தினத்தை எதிர்வரும் 31 ஆம் திகதி கொண்டாடுமாறு யாழ்ப்பாணம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம் பிள்ளை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஐ-103)


## தேவை

1. ரெராசோ கட்டிங் மெசின் (Terrazo Cutting M/C)
2. பெஞ்ச் றில்லர் (Bench Driller)
3. எயர்கூல் வெல்டிங் மெசின் (Air Cool Welding Plant)
4. பார் கட்டர் 3/8"-1" (Bar Cutter)
5. பார் பென்டர் 3/8"-1" (Bar Bender)

மேற்படி கருவிகள் விற்பனைக்கு வைத்திருப்போர் உடன் தொடர்பு கொள்ளவும்.

யூரோவில்
866. பருத்தித்துறை வீதி,
நல்லூர். யாழ்ப்பாணம்.

(64180)

## வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்

வதிரி, கரவெட்டி.

பாடசாலையை விட்டு விலகிய இளைஞர்/யுவதிகளுக்கான பின்வரும் பாட நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விவரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் கழகத்தில் பெற்று 30-03-99 ற்கு முன் விண்ணப்பிக்கவும்; பயிற்சி ஆரம்பம்: 01-04-1999.

| பாட-நெறி | காலம் |
|---|---|
| தமிழ் சுருக்கெழுத்து, தட்டச்சு | 7 மாதம் |
| ஆங்கில தட்டச்சு | 6 மாதம் |

குறுங்கால பயிற்சியாக நடத்தப்படவுள்ள தட்டச்சு இயந்திர திருத்தற் பயிற்சிக்கு அனுபவம் உடையவர்களிடமிருந்து போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

செயலாளர்.

(சி/6893)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டத்தரிப்பு

## பரிஷ் ப. நோ .கூ. சங்கம்

## பகிரங்க ஏல விற்பனை

1 கீழ்க் குறிப்பிடும் ரயர் வகைகள், பகிரங்கஏலத்தில் 03-04-99 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கத்தலைமை அலுவலகத்தில் விற்பனை செய்யபபடும். ஏலத்தில் பெற்றவர்கள் முழுப் பணத்தையும் கட்டி அன்றைய தினமே ரயர்களை எடுத்துச் செல்லல் வேண்டும். தவறின் ஏலம் நிராகரிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| பாவிக்கப்பட்ட உழவு இயந்திர ரயர் பெரிது | | — 02 |
| | லொறி ரயர் 900 × 20 | — 02 |
| ,, | வான் ரயர் 700 × 15 | — 01 |
| ,, | வான் ரயர் 750 × 15 | - 01 |

2) சிறு ஓட்டைகளையுடைய மண்ணெண்ணெய் வெற்று பரல்கள் விற்பனைக்குண்டு. ஒன்றின் விலை ரூபா 250. மொத்தமாகப் பெறுபவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

3) கீழ்க் குறிப்பிடும் பொருள்களுக்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி 03-04-1999

வெற்றுச் சாக்குகள்
வெற்றுப் பைகள்

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ் ப, நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு

(சி/6899)

## தீவுப்பகுதி ப. நோ. கூ. சங்கம்

அனலைதீவு

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் பின்வரும் பதவிகளுக்கு தகுதியான ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர். **10 - 04 - 99** ஆம் திகதி கிடைக்கக்கூடியதாக பொது முகாமையாளர், தீவுப்பகுதி ப நோ. கூ. சங்கம் அனலைதீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கல்வித் தகமைகள், அனுபவச் சான்றிதழ்களின் போட்டோப் பிரதிகளை விண்ணபத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

1. பதவி:

**காசாளரும் இலிகிதரும் [ நிரந்தரம் ]**

தகைமை:

கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டத்தில் 2 வருட அனுபவம்.

அல்லது

க. பொ. த. சாதாரணம் ஆறு பாடங்களில் சித்தியுடன் கணிதம் / வர்த்தக கணிதம் / எண் கணிதம் உடன் தமிழ்மொழி உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தி.

சம்பளம்:

31/97 புதிய சம்பளத்திட்டத்தின்படி 15 வது
2 700 - 60 x 10 - 70 x 10 - 4,000.

பிணைப்பணம்:

உரொக்கப்பிணை 15.000/- மும் ஆதன உறுதிப்பிணை 25, 000/- அல்லது உரொக்கம் 25,000/-

வயது:-

45 க்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

2 பதவி:

**களஞ்சியப் பொறுப்பாளர் [ நிரந்தரம் ]**

தகைமை:

கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத் திட்டத்தில் 2 வருட அனுபவம்/13 ஆவது சம்பளத் திட்டத்தில் 4 வருட அனுபவம்

அல்லது

க. பொ. த. சாதாரணம் 6 பாடங்களில் சித்தியுடன் கூட்டுறவுப்பணியாளர் தராதரப் பத்திரம் சாதாரணம்

அல்லது

க. பொ. த. சாதாரணம் 6 பாடங்களில் சித்தியுடன் கணிதம்/வர் தக கணிதம்/எண்கணிதம் உடன் தமிழ்மொழி உட்பட 4 பாடங்களிலான திறமைச்சித்தி.

சம்பளம்:

31/97 புதிய சம்பளத் திட்டத்தின்படி
202/13 வது
2,800 - 65 x 10 - 80 x 10 - 4,250;

பிணைப்பணம்:

உரொக்கப்பிணை 15,000/- மும் ஆதனப் பிணை 25,000/- மும் அல்லது உரொக்கப் பிணை 25,000/-

வயது:

45 க்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்
தீவுப்பகுதி ப. நோ. கூ. சங்கம்.
அனலைதீவு.

[சி/( 891]

## சஞ்சிகை வெளியீடு

கொழும்புத்துறை, மார்ச் 26

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு 'ஞானச்சுடர்' சஞ்சிகைவெளியீட்டு விழா நடைபெறும்.

பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை இளைப்பாறிய அதிபர் சித்தாந்த பண்டிதர் சி. வேலாயுதம் நிகழ்த்துவார் நூல்மதிப்புரையையாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் நிகழ்த்துவார்.

(ஐ-30)

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை, மார்ச் 26

யாழ். பிரதேச செயலர் பிரிவில் அடங்கும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் இப்பகுதிப் பாலர் பாடசாலைகளின் பதிவு சம்பந்தமான சில முக்கிய விவரங்கள கலந்துரையாடப்படும்.

(ஐ-30)

## புதிய பாடத்திட்ட கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, மார்ச் 26

வலிகாமம் கல்விவலய பாடசாலைகளில் தரம் ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டம் சம்பந்தமான ஆறு நாள் தொடர் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

வலிகாமம் கல்விவலயம், பிரிவு ஒன்றுக்கான கருத்தரங்கு சித்தங்கேணி கணேசா வித்தியாலயத்திலும்—

பிரிவு இரண்டுக்காள கருத்தரங்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும்—

பிரிவு மூன்றுக்கான கருத்தரங்கு மல்லாகம் மகாவித்தியாலயத்திலும்—

காலை 8. 30 மணி தொடக்கம் மாலை 4. 30 மணிவரை நடைபெறும்.

(ஐ-152)

## புராணபடனப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 26

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் புராண படனப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்குவண்ணை, நாவலர் மகா விததியாலயத்தில் நடைபெறவுள்ளது.

குடாநாட்டில் உள்ள பாடசாலை மாணவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்வர்ቜ

(ஐ - 7)

## கருத்தரங்கு

சுன்னாகம், மார்ச் 26

தேசிய கலை இலக்கிய பேரவையினால் நடத்தப்படும் திறனாய்வு தொடர் கருத்தரங்கின் அடுத்த அமர்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் ஐ. சாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் ''அமைப்பியல் பின்அமைப்பியல்'' என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

(ஐ-27)

## கண்ணீர் அஞ்சலி

தீவுப்பகுதி திடீர்மரண விசாரணை அதிகாரியும்
சமாதான நீதிவானுமாகிய

### யோ. வி. இம்மானுவேல்

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
உத்தியோகத்தர்கள்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை.

(64174)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்மன்ற

ஆதரவில்
எம். வீ. கிருஷ்ணாழ்வார்
நூற்றாண்டு விழாச் சபை
நடத்தும்

### ஈழத்து இசை நாடகமேதை
### நாடக கவிமணி
### எம். வீ. கிருஷ்ணாழ்வார்
### நூல் அறிமுக விழா

இடம்: கைலாசபதி கலையரங்கம்
(யாழ். பல்கலைக்கழகம்)

காலம்: 1999 03 - 27 சனிக்கிழமை
காலை 9-30 மணி (புதிய நேரம்)

சிறப்பு நிகழ்வு

பிரபல இசை நாடகக் கலைஞர்கள்
இணைந்து வழங்கும்


இசை நாடக மேடைப் பாடல்கள்

குறிப்பு: வடமராட்சி வாழ் அன்பர்களின் வசதிகருதி இலவசமாக விசேட பேருந்து வசதிகள் கரவெட்டி மத்தி சம்பந்தர் கடையிலிருந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்பதனை யு ம அறியத் தருகின்றோம்.

தமிழ் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/ 6900)

## நனைந்த விழிகளுடன்
## நான்காம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### ஆறுமுகம் ஜெயரத்தினம்

(முன்னாள் உதவிமுகாமையாளர், இலங்கை வங்கி)

மலர்வு
22 — 05 — 1937

உதிர்வு
10 — 04 — 1995

திதி: 26 - 03 - 1999

உத்தமமாய் நாம் வாழ உழைப்பால் நீர் உயர்ந்து
எம் கண் காணாமல் எமனோடு நீர் சென்று
ஆண்டுகள் நான்கும் ஆனதுவோ, ஆறவில்லையே
எம்துயரம்

இன்னும் எத்தனை ஆண்டு இத்துயரில் நான் வாழ?

தங்கள் ஆத்மா இறைவனடியில் அமைதி பெற்றிட
இறைஞ்சும் உங்கள்

— குடும்பத்தினர்

66/2, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(64146)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இன்னொரு ஏட்டுச் சுரைக்காய்

சகல மக்களுக்கும் சம வாய்ப்பு அளிக்கவகைசெய்யும் சட்டத்தைக் கொண்டு வருவது குறித்து அரசாங்கம் புதிதாகப் பேசுகிறது.

இன்று எத்துறையை எடுத்துக் கொண்டாலும் இனரீதியாகவும், மத, குல, பால், பிரதேச ரீதியாகவும் பாரபட்சம் காட்டப்படுவதாகப் புகார்கள் கூறப்படுகின்றன. சம வாய்ப்புச் சட்டத்தின் மூலம் இவற்றை ஓரளவு தீர்க்கலாம் என அரசு கருதுகிறது என்று அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

உத்தேச சம வாய்ப்புச் சட்ட மூலத்தை ஆராயுமுகமாக அவர் தமது அமைச்சில் மாநாடு ஒன்றையும் நடத்தினார். பிரஸ்தாப சட்டத்தின் நற்பயன்களை விளக்கிக் கூறுகையில் —

இலங்கை அரசாங்க சேவையில் 4 சதவீதம் கூடத் தமிழர்கள் இல்லை. இராணுவம் பொலீஸ் துறைகளை எடுத்துக்கொண்டால் ஒரு சத வீதம் கூடத் தமிழர்கள் கிடையாது —

தமிழ் மக்களுக்கு, கல்வியில், வேலை வாய்ப்பில் கடந்த காலங்களில் பாரபட்சம் காட்டப்பட்டதாலேயே, நாடு இன்று பெரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறது — என்று உண்மைகளை ஒப்புக்கொண்டிருக்கிறார். நடைமுறையில் உள்ள அநியாயங்களைப் புட்டுக் காட்டியிருக்கிறார்.

அமைச்சர்பீரிஸின் நல்ல சிந்தனை, நியாய சிந்தை முழு அரசாங்கத்திடமும் இருந்திருப்பின், கட்சி அரசியல்நலனை ஒதுக்கிவிட்டு நாட்டு நலனை முன்னிறுத்தி, தமிழர்களின் குறைகளைத் தீர்க்க கடந்த நான்கு வருட காலத்தில் எத்தனையோ நடவடிக்கைகளை, பரிகாரங்களை மேற்கொண்டிருக்கலாம்.

வேலை வாய்ப்பு, தமிழ் மொழி அமுலாக்கம், திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுத்துதல், தமிழர்களைச் சந்தேகப் பேர்வழிகளாக நோக்காதிருப்பது, அவர்களின் வாழ்க்கைத் தேவைகளை நியாயபூர்வமாக நிறைவேற்றுவது போன்ற பணிகளை — பரிகாரங்களை — செய்திருந்தால் — சம வாய்ப்பு அளிப்பது என்ற உத்தேச செயற்பாட்டில் தமிழர்களுக்கு நம்பிக்கை பிறந்திருக்கும்.

சந்திரிகா தலைமையிலான அரசாங்கத்தின் நடவடிக்கைகள், நடைமுறைப்படுத்தல்கள் துன்ப துயரங்களையும் அவலங்களையும் விளைவித்தது ஒரு புறமிருக்க; அரசு மீது தமிழர்களுக்கு நூறு வீதம் அவநம்பிக்கையை அது உண்டாக்கிவிட்டது; ஏமாற்றமே முடிவாகியுள்ளது.

தமிழ் மக்களின் மூலாதாரப் பிரச்சினையான இனப் பிரசினைக்கு நீதியான தீர்வு காணாமல், இத்தகைய சில்லறைகளைக் கிலுக்கிக் காட்டுவதால் நடைமுறையில் எந்த நல் விளைவும் உண்டாகாது.

தமிழ் உத்தியோகமொழி மனித உரிமைகளைப் பேணுதல், சட்டத்தின் முன்னால் சகலரும் சமன் போன்ற முந்திய சட்ட விதிகள், விதிமுறைகளைப் போலவே உத்தேச சம வாய்ப்புச் சட்டமும் ஏட்டுச் சுரைக்காயாகவே அமையும். வெறும் கண்துடைப்பும், வர்ணம் பூசி மினுக்குதலுமாகவே முடியும்!

# செந்தமிழும் இறைநாமமும் சேர்ந்த பெயர்களை பிள்ளைக்குச் சூட்டுங்கள்

எம் முன்னோர் தம் வாழ்வில் எப்பொருளிலும் இறைவனையே காண முனைவர். தம் கண்ணில் தென்படுவதெல்லாம் கடவுளின் காட்சியாகக் கருதுவர். அச்சம் தரும் மிருகங்களைக் கூட ஆண்டவன் படைப்பாகக் கருதி அவற்றையும் கைகூப்பி வணங்குவர். சைவ சமயத்தின் முழு முதற் தெய்வமாகிய சிவன் "அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்" இவ் அவனியில் நீக்கமற நிறைந்துள்ளான் — என்பது ஞானத் திருநூல்கள் தரும் இறை உண்மை ஆகும்.

எனவேதான் கண்ணில் தெரியும் காட்சிகளை எல்லாம் கடவுளின் காட்சிகளாகக் கருதி இறைவன் நாமத்தோடு தாம் காணும் பொருள்களை இணைத்துச் சொல்லி மகிழ்ந்தனர். கங்கை நதியை கங்காதேவி என்றும், பூமியை பூமாதேவி என்றும், ஊர்கள் ஒவ்வொன்றையும் இறைவனின் அடிகளோடு இணைத்து சொல்லுகின்ற மரபினை நம் முன்னோர் பேணினர். அத்தோடு திருச்சிற்றம்பலம், திருக்கோவையூர், திருவெண்ணெய் நல்லூர், திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவேரகம், திருப்பழனி என ஊர்கள் ஒவ்வொன்றையும் மங்கலச் சொல்லால் இணைத்து இன்புற்று வாழ்ந்து மகிழ்ந்தனர்.

பொதுவாக இந்து சமயத்தவர் தம் இருப்பிடங்கட்கு இறை நாமத்தைத் சூட்டிய தோடு — இல்லற வாழ்வில் கருவாகி உயிரான தம் பிள்ளைகளுக்கு கடவுளரின் நாமங்களைச்சூட்டி, பிள்ளைகளையும் தாம் வணங்குங் கடவுளராகப் போற்றினர். தம் வீட்டில் ஒவ்வொரு பிள்ளையையும் அழைக்கின்றபோது இறைவனையே அழைப்பதாக இன்புற்றனர். பன்னெடுங் காலமாக இந்துக்கள் தம் சந்ததிக்கு இனிய இறை நாமங்களைச் சூட்டி தம் பண்பாட்டு மரபாகப் பேணினார்கள்.

## ஞானக் கதிர்

வேதம், இதிகாசம், புராணம் கூறும் திருநாமங்கள் ஒவ்வொன்றிற்கும் மிகச் சிறந்த அர்த்தமும் உண்டு. அர்த்தம் உடைய ஆண்டவனின் பெயரை உள்ளுணர்வுடனும் பக்தியுடனும் தம் சந்ததிக்குச் சூட்டி சஞ்சலமின்றி வாழ்ந்தனர்.

ஈழத்திருநாட்டில் பாரம்பரியமாக இறைதிரு நாமங்களைத் தம் சந்ததிக்குச் சூட்டுகின்ற மரபு இருந்து வந்துள்ளது. குறிப்பாக கந்தபுராணக் கலாசாரத்தை பெரிதும் கொண்ட நாடு என தென்னாட்டவர் எம்மைப் போற்றியதற்கு அடிப்படைக் காரணம் உண்டு.

குறிப்பாக பல நூறு வருட சந்ததித் திருநாமங்களை நோக்கின் கந்தபுராணப் பாத்திரத்தில் வருந் திருநாமங்களே ஆண், பெண் இருபாலபருக்கும் சூட்டப்பட்டதை அறியலாம். கந்தையா, ஆறுமுகம், வேலுப்பிள்ளை, கந்தசாமி, மயில்வாகனம், சுவாமிநாதன், சின்னத்தம்பி, சுபபிரமணியம் போன்ற ஆண்பாற் பெயர்களும், பார்வதி, வள்ளிப்பிள்ளை, தெய்வானை, லட்சுமி, அம்பிகை, சரஸ்வதி போன்ற பெண்பாற் பெயர்களும், ஆழ்வாப்பிள்ளை, இராமுப்பிள்ளை, நாராயணபிள்ளை போன்ற வைஸ்ணவத் திருநாமங்களும் எம் சந்ததித் திருநாமங்களாக சூட்டப்பட்டு வழக்கில் இருந்துள்ளது.

தெய்வ நம்பிக்கையையும், நேர்த்திகளையும் வாழ்வாகக் கொண்ட எம் சந்ததியினர் திருநாமம் சூட்டுவதற்கு ஒரு சடங்கு வைபவத்தையே முதன்மை கொடுத்து காத்து வந்துள்ளனர். தம் பிள்ளைக்கு நாம கரணம் சூட்டும் நாளில் கோயில் சந்நிதானங்களில் பிள்ளையைக்கிடத்தி இப் பிள்ளையை உனக்கே அடைக்கலமாக்குகின்றேன். உன் திருநாமத்தோடு வளர்ப்பேன் என உறுதி பூண்டனர். இவ் இனிய பாரம் பரியம் இன்று தேய்ந்து போவது வேதனைக்குரியதாகும்.

செந்தமிழும், இறைநெறியும் சேர்ந்த அருட்திருப் பெயர்களைத் தம் அன்புப் பிள்ளைகட்கு அநாகரிகம் எனக் கருதி இன்று அர்த்தம் இல்லாத நாமங்களையே சூட்டும் பரிதாபம் வேதனைக்குரியது இலக்கப் பொருத்தம் இனிய இலாபம் எனக் கருதி கடவுள் நாமங்களைக் கைவிட்டு கணிப்பீட்டுப் பெயர்களை வைக்கத் தொடங்கி

**ஆறு. திருமுருகன்**

னர் இதனால் கண்டபலனை நம் சந்ததி உணரும்.

இந்துக்களின் இறை வழிபாட்டில் ஆதியும் அந்தமும் இல்லாத ஆண்டவனுக்கு ஆயிரத்தெட்டு திருநாமம் உச்சரித்து அர்ச்சிக்கும் வழமை உண்டு. இறைநாமத்தை உச்சரிப்பதற்கேற்ற நற்பலனை அடைவோம் என்பது வேதம் ஆகமம் கூறும் நல்வழியாகும். அருந்தமிழில் அழகான திருநாமங்கள் பல இருக்க அர்த்தமற்ற பிறமொழிக்கலப்போடு பிள்ளைக்குப் பெயர் சூட்டுவது பொருந்தாச் செயலாகும்.

உயிர்களில் எல்லாம் இறைவனைக்கண்ட நம் முன்னோரின் முறையைப்பின்பற்றுங்கள் கடவுளின்பெயரைஎம் சந்ததிக்குச் சூட்டி, அருளையும், ஆனந்த வாழ்வையும் பெறுவதோடு அருந்தமிழையும் காக்க முற்படுங்கள். ★

# கூட்டுறவுச் சங்கங்களுக்கு அயடின் கலந்த உப்பு

அரியாலை, மார்ச் 26

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் போதியளவு அயடின் கலந்த உப்பு கையிருப்பில் உள்ளதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குத் தேவையான அளவு அயடின் கலந்த உப்பை கொள்வனவு செய்து பாவனையாளர்களுக்கு வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

கூட்டுறவுச் சங்கங்கள் இந்த உப்பை கட்டாயம் கொள்வனவு செய்ய வேண்டும் என்றும் உதவி ஆணையாளர் வலியுறுத்தி கூறியுள்ளார்.

[ஐ - 17]

## இறுதிப் போட்டி

வலிகாமம் தெற்கு, மார்ச் 26

வலிகாமம் கல்வி வலயம் பிரிவு இரண்டின் மெய்வல்லுநர் இறுதிப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறும்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சு. கணபதிப்பிள்ளை முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. கமலநாதன், வீ. பாலசிங்கம் (உடற்கல்வி) ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர். (ஐ-152)

### உதய வாக்கு

தம்மிடம் நம்பிக்கை கொள்பவர்களே பெருமையும், வலிமையும் எய்தியுள்ளனர்.

**சுவாமி விவேகானந்தர்**

## பங்குக் குருமனை

பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் சுமார் 7 லட்சம் ரூபா செலவில் புதிதாக பங்குக் குருமனை ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

இக் குருமனை பருத்தித்துறை பங்குச் சபையின் ஏற்பாட்டில் கட்டப்பட்டு வருவதாக பருத்தித்துறை பங்குச் சபைச் செயலாளர் வின்சன் டிபோல் தெரிவித்தார். [ஐ 173]

## கிரிக்கெட் போட்டி

யாழ். செயலக நலன்புரிக் கழகத்தினால் திணைக்களங்களுக்கிடையில் மென்பந்து கிரிக்கெட், பூப்பந்து போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கிரிக்கெட், மென்பந்துப் போட்டி யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் இம் மாதம் 27 ஆம்திகதி முதல் ஏப்ரல் 11 ஆம் திகதி வரையும் —

பூப்பந்துப் போட்டி இம் மாதம் 31 ஆம் திகதி முதல் ஏப்ரல் 2 ஆம் திகதி வரையும் யாழ் வை. எம் சி ஏ. உள்ளக விளையாட்டரங்கிலும் — நடைபெறவுள்ளன.

கிரிக்கெட் போட்டியில் 14 குழுக்களும், பூப்பந்து போட்டியில் 35 போட்டியாளர்களும் பங்குபற்றுகின்றனர். (ஐ 5)

## தவக்காலச் சிந்தனை-37

எங்கும் சிலுவை; எல்லோர் சுமைகளும் சிலுவையின் வடிவில் சுமைகளைத் தாங்கும் மனங்களாக பயனளிக்கும் நாள்களில் சிலுவைப் பயணத்தில் பங்கேற்பவராக கூடுகின்றோம் ஏறெடுத்துப் பாருங்கள்; கசையடியும், முள்முடியும்; மூன்றாணியில் தொங்கும் உருக்குலைந்த உடல், இத்தோற்றத்திற்கு யார் காரணம்? யாருக்காக? யாரால்? ஏன்? எமது உள்ளத்தில் சற்று எண்ணித் தியானிக்கச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

மனதை ஒரு நிலைப்படுத்தாது தியானத்தில் ஈடுபட முடியாது. வெளிவேடர்களாய், பார்வையாளர்களாய், காயப்படுத்தும் ஒருவராய் இராது, துன்பத்தைத் துடைக்கும் தூயவராய், மாற மனங்களில் மாற்றங்கா வேண்டும். நாம் சுற்றவாளி அல்லர்; எம்மைச் சுத்தப்படுத்துவதில் நாம் முயல தியானம் சுயதரிசனமாக, எமது குறை குற்றங்களை ஏற்று, சுமைகளைக் களையும் முயற்சியில் தியானிப்போம். துன்புறும் மனங்களுக்கு ஆறுதலாய் அருகிருந்து உதவுவதில் எம்மைப் புடமிட்டு எம்மை அர்பணிக்கும் சமூகப் பணிகளில் மற்றவர் சுமைகளை தீர்க்க முயல்வோம். வார்த்தையில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் கிறிஸ்து காட்டிய வழியில் காயங்களைத் துடைத்து ஆறுதல் கொடுக்கும் அன்பின் உறவில் நொந்திருக்கும் இதயங்களை குணப்படுத்தும் சிலுவைப் பயணத்தைத் தொடர்வோம்.

— யோசப் பாலா

யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

நாடி நயமும் காண்போம்!

ஆடித்தில்லை ஐந்தொழில் ஆற்றும்
அமரர் கோன் தன்னைத்
தேடிக் காணாத் திருமால் பிரமன்
திகைத்துத் தேம்பியழ
சூடிக் கொன்றை அரவும் அசை செய்
சந்திர சேகரனை
நாடி நாளும் வண்ணார் பண்ணை
நகரில் காண்போமே.

பண்டிதர் சி. கார்த்திகேசு
[சேந்தன்]

## நாளை

பங்குனி 13

சனிக்கிழமை

திதி ஏகாதசி

பின்இரவு 3.22 வரை.

நட்சத்திரம்: பூசம்

நண்பகல் 12.29 வரை.

ஏகாதசி விரதம்

சுபநேரம் 3 14 4 44

ராகுகாலம் 9.14 10 44

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1996 சம்பவங்களையும் விசாரிக்க ஜனாதிபதிக்கு யோசனை கூறப்படும்

## ஆணைக்குழு செயலர் உதயனுக்குத் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். மாவட்டத்தில் 1996 ஆம் ஆண்டு காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளையும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு யோசனை தெரிவிக்கும் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கப்போவதாக காணாமற்போனோர்தொடர்பான விசாரணைகளை நடத்தும்ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் எம். சி. எம். இக்பால் உதயனுக் குத் தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தந்த மேற்படி குழுவினர் யாழ். செயலகம், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பருத்தித்துறை பிரதேச செயலகம் போன்ற இடங்களில் வைத்து காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை நேற்று முன்தினம் மாலை வரை நடத்தினார்கள்.

இந்த விசாரணைகளை முடித்துக் கொண்டு மேற்படி குழுவினர் நேற்று காலை கொழும்பு திரும்ப இருந்தனர்.

செயலாளர் எம். சி. எம். இக்பால் உதயனுக்கு மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

யாழ். மாவட்டத்தில் 144 விசாரணைகளை மட்டும் நடத்துவதற்கு வந்த ஜனாதிபதி ஆணைக்குழு 167 முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளது. இதில் 87 வீதமான விசாரணைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

புதிய முறைப்பாடுகளை விசாரிக்க இந்தக் குழுவுக்கு அதிகாரம் இல்லாத போதும் இது தொடர்பான முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பிரமுகர்கள் எமது குழுவிடம் முன்வைத்த காரணங்களை அடிப்படையாகக் கொண்டு 1996 ஆம் ஆண்டு காணாமற்போனோர் தொடர்பாக ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தப்படும்.

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது நடைபெற்ற விசாரணைகளை அடிப்படையாகக் கொண்டு ஓர் இடைக்கால அறிக்கையொன்றும் ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படும்— என்றும் அவர் மேலும் கூறினார்.

நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற விசாரணைகளில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கைது செய்யப்பட்டோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றின் பிரதி நிதிகள் ஜனாதிபதி ஆணைக் குழு முன் சாட்சியமளித்தனர்.

(ஐ-5)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 26

மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் ந. மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய பிரிவு மூன்றின் உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆ.வ. கணேசலிங்கம் பிரதம விருந்தினராகவும், வலி. வடக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர க. பீதாம்பரம், மல்லாகம் மத்தி கிராம உத்தியோகத்தர் சு. பூபாலசிங்கம், ஆரம்பக்கல்வி முதன்மை ஆசிரியர் திருமதி இ. இராமலிங்கம், மேற்படி வித்தியாலய இளைப்பாறிய ஆசிரியை திருமதி பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

(ஐ 7)

## பருத்தித்துறையில் 35 பேர் சாட்சியம்

வடமராட்சி, மார்ச் 26

பருத்தித்துறையில் இரு நாள்கள் நடைபெற்ற ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையின் போது 35 பேர் சாட்சியமளித்தனர்.

ஜனாதிபதி ஆணைக்குழு தலைவி மனோரி சரத் முத்தெட்டுவேகம, உறுப்பினர்கள் பொ. பாலவடிவேல், செ. ஜி. தர்மதாசா ஆகியோர் முன்னிலையில் பருத்தித்துறை பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெற்ற இவ் விசாரணையின் போது சாட்சியமளிக்க காணாமற்போனவர்களின் உறவினர்கள் 35 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 30 பேர் ஆஜராகிசாட்சியமளித்தனர்.

காணாமற்போன இந்த 30 பேரில் பெரும்பாலானோர் கடலில் காணாமற் போனவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. இவர்களில் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களும் அடங்குவார்கள்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கையின் போதும் கடல் பகுதிகளில் வைத்தும் சுமார் 40 பேர் வரை காணாமற் போனதாக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி பி. வேலாயுதபிள்ளை ஆணைக் குழுவுடன் கலந்துரையாடும் போது தெரிவித்தார். இவர்கள் தொடர்பான தனித்தனி விவரங்களை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதுதவிர வல்வெட்டித்துறை, கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், பிரஜைகள்குழு, அல்வாய் கிழக்கு விவசாயிகள் சங்கம், கால்நடை வளர்ப்போர் சங்கம் போன்ற சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் 7 பேரும் சாட்சியமளித்தனர்.

இதேநேரம் 95 ஆம் ஆண்டுக்குப் பின்னர் காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளையும் ஆணைக்குழு ஏற்றுக் கொண்டதுடன். இந்த முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை செய்ய தமக்கு அதிகாரம் இல்லை என்றும், இது தொடர்பாக விசாரணை நடத்த இந்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் இல்லையேல் இதற்கென தனியான ஆணைக்குழு நியமிக்க வேண்டும் என ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கப்படும் என்றும் ஆணைக்குழு தெரிவித்தது.

பருத்தித்துறையில் விசாரணை நடத்த வேண்டிய வசதிகளையும், ஏற்பாடுகளையும் செய்து தந்தமைக்காக பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரனுக்கு ஆணைக்குழுவின் தலைவி திருமதி மனோரி முத்தெட்டுவேகம நன்றி தெரிவித்தார்.

(ஐ-173)

## இந்தியாவில் பயிற்சி

வலி. வடக்கு, மார்ச் 26

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட உளவியல் விரிவுரையாளரும் சிரேஷ்ட உளவளத் துணையாளருமான வண.பிதா டேமியன் ஒரு மாத காலம் இந்தியாவில் பயிற்சியை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

(ஐ-86)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
கந்தையா அன்னலக்ஷ்மி

மலர்வு 16 — 04 — 1934
உதிர்வு 24 — 02 — 1999

எங்கள்:
அன்புத் தெய்வமே!
பண்பிலே சிகரமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
அன்பின் திருவுருவாய்
அமைதியின் உறைவிடமாய்
குணத்தின் இலக்கணமாய்
குடும்பத்தின் குலவிளக்காய் இருந்து
நாமின்று நல்வாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டிய
எம் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்:
ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் தொலைபேசி மூலமும் எமது துக்கத்தில் பங்குபற்றி ஆறுதல் கூறியவர்களுக்கும் பல வழிகளில் உதவி செய்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்! அத்துடன் 26 - 03 – 99 இல் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும். 28 - 03 – 99 இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும், உற்றார், உறவினர், நண்பர்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''கமலா வாசா'',
கந்தரோடை,
சுன்னாகம்.

(6417)



## கேள்வி அறிவித்தல்

### நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர்பிரதேசசபைத் தலைவரினால் 15 04 - 1999 ஆம் திகதி முற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விகள் 16 - 04 - 99 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கேள்விச் சபையால் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விக்காரரோ அல்லது அவரால் அனுமதி பெற்ற பிரதிநிதியோ கலந்து கொள்ளலாம்.

பதிவுசெய்யப்பட்ட வேலைகள் ஒப்பந்தகாரர் கேள்விகளைக் கோருவதற்கு தகுதியுடையவராவார்.

கேள்விப் பத்திரங்கள் நல்லூர் பிரதேச சபை தலைமைச் செயலகத்தில் 26 – 03 - 99 ஆம் திகதி தொடக்கம் 15 - 04 - 1999 முற்பகல் 10.30 மணி வரை கீழ்க் குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கு நேரே காட்டப்பட்டுள்ள கேள்வி வைப்புப்பணத்தையும் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபைத் தலைமைக் காரியாலயத்தில் வேலை நாள்களில் பெற்றுக் கொள்ளலாம்.

க. மணிபல்லவராஜன் ஜே. பி. யூ. எம்.
தலைவர்
நல்லூர் பிரதேச சபை.

25 - 03 - 1999

| இல: | வேலை விவரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப்பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் |
|---|---|---|---|
| 1. | ஞானவைரவர் ச. ச. நிலைய திருத்தவேலை | 100/- | 1,000/- |
| 2. | காரைக்கால் இந்து மயான மடம் திருத்த வேலை | 125/- | 1,500/- |
| 3. | கலைவாணி சனசமூக நிலைய திருத்த வேலை | 100/- | 1,000/- |
| 4 | பாரதி சனசமூக நிலைய திருத்த வேலை | 100/- | 1,000/- |
| 5. | கலைமகள் சனசமூக நிலைய திருத்த வேலை | 100/- | 1,000/- |
| 6. | இந்து இளைஞர் மன்றமும், சனசமூக நிலையமும் திருத்தவேலை | 100/- | 1,000/- |
| 7. | காந்திஜி சனசமூக நிலைய திருத்த வேலை | 100/- | 1,000/- |
| 8. | கட்டை ஆல் மயானம் புனரமைப்பு வேலை | 150/- | 2,500/- |
| 9. | கொட்டைக்காடு மயானம் புனரமைப்பு வேலை | 125/- | 1,500/- |
| 10. | கொக்குவில் இந்து மயானம் புனரமைப்பு வேலை | 150/- | 2,500/- |
| 11. | கலாமன்ற சனசமூக நிலைய புனரமைப்பு வேலை | 125/- | 1,500/- |
| 12. | ஞானவீர சனசமூக நிலைய புனரமைப்பு வேலை | 150/- | 2,500/- |
| 13. | சித்தி பாத்தி மயானம் புனரமைப்பு வேலை | 125/- | 1,500/- |
| 14. | இலங்கை நாயகி சனசமூக நிலைய புனரமைப்பு வேலை | 100/- | 1,000/- |
| 15. | கொக்குவில் சனசமூக நிலைய புனரமைப்பு வேலை | 200/- | 3,000/- |
| 16. | பூதவராயர் வீதி, அணைச்சுவர் கட்டு வேலை | 125/- | 1,500/- |
| 17. | அம்மன் வீதி திருத்தம் | 250/- | 5,000/- |
| 18. | விவேகானந்தா சனசமூக நிலைய திருத்தம் | 100/- | 1,000/- |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
25-03-1999

(சி-6906)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கு பிரதேச காணி சுவீகரிப்பு அநீதியானது, கைவிடப்பட வேண்டும்

## ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், மார்ச் 26

''பல்வேறு வளங்களும் நிறைந்த சிறந்த நிலப்பரப்பைக்கொண்ட வலி வடக்குப் பகுதியை-அப்பகுதி மக்களின் பூர்வீக, புண்ணிய பூமியை —அபகரிப்பதென்பது மிகவும் அநீதியானது. இதனை உடனடியாகக் கைவிட்டு வலி, வடக்கில் மக்கள் சென்று குடியமர வழி சமைக்க வேண்டும்.''

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை மாவிட்டபுரம் முன்னாள் கிராமோதய சபைத் தலைவரும், இலங்கை இசை வேளாளர் சங்கம், கூத்தியவத்தை சனசமூக நிலையம் ஆகியவற்றின் தலைவரும், மாவிட்டபுரம் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளருமான எஸ். ஆர். ஞானசுந்தரம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்மக்கள் இந்தநாட்டின் பிரஜைகளே என்பதும், அவர்களுக்கென்று பாரம்பரியமான பிரதேசங்கள் உள்ளனவென்பதும் மறுக்க முடியாத, மறைக்க முடியாத உண்மை ஆகும். இந்த அடிப்படையிலேயே அரசியல் நடவடிக்கைகளும், போராட்டங்களும் அதன் பிரதிபலனாக நாட்டில் அமைதியற்ற தன்மையும் நீடித்து வருகிறதென்பதையும் எவரும் ஏற்றுக் கொள்ளுவர்.

இந்த நிலையில் மேலும் ஓர் அநீதியான நடவடிக்கை வலி. வடக்கில் இடம்பெற விருப்பதாகக் கூறப்படுவது மேலும் பிரச்சினைகளை வளர்க்கவே உதவும். அமைதி, சமாதானம் என்பதற்குப் பாதகமான சூழ்நிலையே ஏற்படும்

வலி வடக்கில் வாழ்ந்த மக்கள்பாரம்பரியமான தமது பிரதேசத்தின்மேல் மிகுந்த பற்றும் பாசமும் மிக்கவர்கள், தமது மண்ணில் சென்று எப்போது வாழலாம் என இன்றும் ஏங்கி எதிர்பார்த்து காத்திருப்பவர்கள். அதுமட்டுமன்றி வரலாற்று தொடர்புடைய ஆலயங்கள், கீரிமலை புனித தீர்த்தம், கலைஞர் பரம்பரைகள். இசைப்பரம்பரைகள் பலவும் உருவாகிய இடம் வலி.வடக்கு. தொழிற்சாலைகள் உற்பத்தி நிலையங்கள் பொருளாதாரமையங்கள் விவசாய உற்பத்திகள் மீன்பிடி எனப் பல்வேறு விதத்திலும் பொருளாதார விருத்திக்கு வழி சமைத்த பகுதி வலி. வடக்கு. இப்படியானதோர் சிறந்த நிலப்பரப்பை, அப்பகுதி மக்களின் பூர்வீக புண்ணியபூமியை அபகரிப்பது மிகவும் அநீதியானது.

தங்களது அரசாங்கம் உண்மையில் அமைதி, சமாதானம் என்பதை நேசிப்பதாக இருந்தால் கடந்த 10 வருடங்களாக இன்னலுற்றுத் தவிக்கும் வலி. வடக்கு மக்களின் மனங்களை வென்றெடுக்கும் வகையில் வலி. வடக்கு காணி சுவீகரிப்பு முயற்சியை உடன் கைவிட வேண்டும். அப்பகுதி மக்கள் தமது சொந்தப் பூமியில் சென்று வாழ வசதிகளை செய்துகொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்'' — என்றுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் யாழ். அரச அதிபர், வலி. வடக்கு பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ)

## கத்தோலிக்க மாணவர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்ஒன்றியத்தினால் கத்தோலிக்க மாணவர்களுக்கென விசேட கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இரண்டு தொகுதிகளாக நடத்தப்படவுள்ள மேற்படி கருத்தரங்கில் முதலாவது கருத்தரங்கு அடுத்த மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரைக்கும் —

இரண்டாவது கருத்தரங்கு மே மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரைக்கும் பண்டத்தரிப்பில் உள்ள தியான மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

மேற்படி இரண்டு கருத்தரங்குத் தொடரிலும் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் இந்த மாதம் 31 ஆம் திகதி வரை நமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என கத்தோலிக்க மாணவர் மன்றம் அறிவித்துள்ளது.

(இ-7)


## பிற்போடப்பட்டுள்ளது

யாழ் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தினால் நாளை 27-3-99 அன்று நடத்தப்படவிருந்த சிறுகதைப் போட்டி எதிர்வரும் 3-4-99 இற்குப் பிற்போடப்பட்டுள்ளது.

தமிழ் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்
(64204)



## கண்ணீர் அஞ்சலி

**இரத்தினம் புனிதராசா**
(செல்வராசா)

அவர்களின் மறைவால் துயரம் அடைந்திருக்கும் அவரது மனைவி பிள்ளைகள் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையை தெரிவித்துக் கொள்வதுடன அமரர் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அண்ணா தொழிலகம்,
துரைவீதி,
இணுவில்.
(சி/6910)



## கண்ணீரால் அஞ்சலிக்கிறோம்

அகவொளி யாழ். குடும்ப வளத்துணை நிலைய இயக்குநர்
அருள்திரு. எஸ். கே. இராஜநாயகம்
அடிகளாரின் அன்புச் சகோதரர்

**செபஸ்ரி சேவியர்**

அவர்களின் அமரத்துவ செய்தி கேட்டு துயருற்று இருக்கும் குடும்பத்தவருடன் எங்கள் துயரைப் பகிர்வதோடு அன்னாரின் ஆன்மா நிலைவாழ்வு பெற இறை ஆசி வேண்டுகின்றோம்.

கரவைப் பங்கு கிறிஸ்தவ குடும்ப
இயக்கம்.
கரவெட்டி. (சி/6914)



## கண்ணீர் அஞ்சலி

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. மு. சந்திரகுமார்
அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி மு. நாகம்மா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
ஊழியர்கள்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை
[64206]


## இந்துசமயப்பேரவை கண்டனம்தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் இராணுவ முகாம் விஸ்தரிப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்துக்கு அனுமதி வழங்க மறுத்தமை ஜனநாயகத்துக்கு எதிரான செயல் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

இந்து சமயப் பேரவை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் மகா வித்தியாலயத்தில் தமது அமைப்பு நடத்தவிருந்த கூட்டத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டதைக் கண்டித்து அந்த அமைப்பு செய்திக்குறிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

''நாம் சாத்வீகமான முறையில் எமது ஆத்மீக பலத்தைப் பயன்படுத்தி எத்தகைய அநீதியான செயல்களையும் எதிர்கொண்டு வெற்றிகொள்வோம் என்பதைப் பகிரங்கமாகத் தெரிவித்துக்கொள்கிறோம்'' — என்றும் அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## ஆசிரியர் செயலமர்வு

தென்மராட்சி, மார்ச் 26

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் ஒன்று மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட அறிமுகச் செயலமர்வுகள் இன்று முதல் ஆறு நாள்கள நடைபெறவுள்ளன. (இ-117)

## சமய சந்நிதியில்

கொழும்புத்துறை மார்ச் 26

யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் அமைந்துள்ள வியாகுல அன்னை கெபியில் இன்று வெள்ளிக்கிழமை ஆறாம் வெள்ளி வழிபாடு நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 26

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் மஹா கும்பாபிஷேகமண்டல பூர்த்தி விழாவும் ஆயிரத்தெட்டு சங்காபிஷேகமும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (க)

★ ★ ★

மூளாய், மார்ச் 26

மூளாய் வதிரன்புலோ முத்துக்குமாரசுவாமி ஆலயத்தின் சப்பறத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகியுள்ளது.

(ஐ-99)

★ ★ ★

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் கோயில் பிராயச்சித்த சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிமுதல் 10-30 மணி வரை நடைபெறும். (க)

## மரமுந்திரிகை கன்றுகள்

நெடுந்தீவு, மார்ச் 26

நெடுந்தீவு விவசாயிகளுக்கு மரமுந்திரிகைக் கன்றுகள் வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை நெடுந்தீவுப் பிரதேச சபைத்தலைவர் அ. வெ அரியநாயகம் தலைமையில் நடைபெறும். (இ-111)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ் பல்கலைக்கழக வெள்ளிவிழாவை முன்னிட்டு பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையின் ஆதரவுடன் தமிழ் மன்றத்தினால் நாளை சனிக்கிழமை நடத்தப்படவிருந்த சிறுகதைப் போட்டி அடுத்த மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-7]


உ
விராட் விஸ்வப்பிரம்மனே நம

## திருமண அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் பங்குனி 12 ஆம் நாள் (26-03-99) வெள்ளிக்கிழமை காலை 9.30 தொடக்கம் 11 00 மணி வரையுள்ள புனர்பூச நட்சத்திரமும் கடக லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திருநெல்வேலி, காளிகோயிலடி
K பொன்னுத்துரை தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**கலைச்செல்வன்**
(Canada)
அவர்களுக்கும்

திருநெல்வேலி காளிகோயிலடி
E இரத்தினசிங்கம் தம்பதிகளின்
ஏக புத்திரி
திருநிறைசெல்வி
**ரமணி**
அவர்களுக்கும்

திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று, இல. 105, ஸ்ரீ கதிரேசன் வீதி. கொழும்பு - 13 இல் அமைந்துள்ள ஸ்ரீ கதிரேசன் கல்யாண மணிமண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் நிகழத் திருவருள் பாலித்திருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சமேதரராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி பொன்னுத்துரை தம்பதிகள்
135, எலிகவுஸ் வீதி,
கொழும்பு - 15.

திரு. திருமதி இரத்தினசிங்கம் தம்பதிகள்
(சின்னராஜா)
68, கன்னாரத் தெரு, ஜிந்துப்பிட்டி,
கொழும்பு - 13
தொலைபேசி இல. 347127

யாழ்ப்பாணத்தில் இருந்து வாழ்த்துவோர்
திரு. திருமதி பொ. நித்தியானந்தம் தம்பதிகள் (மாமனார்)
(இருவீட்டார் அழைப்பு)
(சி/6913)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளியை விட்டு விலகும் மாணவரின்
# அ. அட்டைகளை மீளப் பெற உத்தரவு
## அதிபர்களுக்கு அறிவுறுத்தல்

வலிகாமம் தெற்கு, மார்ச் 26

பாடசாலை மாணவர்களுக்கென வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டைகளை பாடசாலையை விட்டுவிலகும் மாணவர்களிடமிருந்து அதிபர்கள் மீண்டும் பெற்றுக் கொள்ளவேண்டும் என யாழ். மாவட்ட சிவில் நிர்வாக பிரிகேடியர் ரி. ஜி. திலகரட்ணா வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் அவ்வாறு விலகியபின்னரும் அ. அட்டைகளைப் பயன்படுத்தி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இச் செயற்பாடு பாடசாலை மாணவர்களுக்கென விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டதன் நோக்கத்தையே கெடுத்துவிடும் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பாடசாலையை விட்டு விலகும் மாணவரின் பாடசாலை விசேட அடையாள அட்டைகளைத் திரும்பப் பெறாமல் பாடசாலை விடுகைப் பத்திரமோ வேறு ஆவணங்களோ வழங்கப்படக் கூடாது.

வேறு பாடசாலைகளுக்கு அனுமதிபெறும் மாணவர்களிடமிருந்தும் அடையாள அட்டைகள் மீளப் பெறப்படல் வேண்டும்; அம்மாணவர்கள் புதிய பாடசாலை அதிபர்கள் மூலமாக புதிய விசேட அடையாள அட்டையினை பெற்றுக்கொள்ள முடியும்.

தமது அடையாள அட்டையினை மாணவர் அதிபரிடம் ஒப்படைக்கும்போது அதன் 'போட்டோ' பிரதியைப் பெற்றுக் கொள்ளுமாறும் புதிய பாடசாலையில் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும்போது போட்டோப் பிரதியில் உள்ள தகவல்களை சரியாகப் பதிய முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்கள் ஒவ்வொரு மாதம் முடிவிலும் அம்மாதத்தில் மீளப்பெற்ற அடையாள அட்டைகள், மாணவர் விவரம் போன்றவற்றையும், பாடசாலைக்கு தொடர்ச்சியாக ஒரு மாதம் வருகை தராத மாணவர் விவரங்களையும் தத்தம் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் மூலமாக அந்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவேண்டும் எனவும் பிரிகேடியர் ரி. ஜி. திலகரட்ணா அறிவித்துள்ளார். (ஐ-152)

## நூலக திறப்பு விழா

சாவகச்சேரி மகளிர்கல்லூரியின் புதிய நூல் நிலையத் திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்குக் கல்லூரி அதிபர் செல்வி கிருபா வீரசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நூலகத்தை சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு. செ. சரவணபவ வைபவ ரீதியாகத் திறந்து வைப்பார். (இ-31)

## முல்லைத்தீவுப்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஆகியோரின் கொடும்பாவிகளும் அங்கு எரிக்கப்பட்டன.

புதுக்குடியிருப்பில் இடம் பெற்ற பேரணி புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தில் முடிவடைந்து அங்கு கூட்டம் நடைபெற்றது.

இந்த இரு பேரணிகளில் ஆயிரக்கணக்கில் மாணவர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (இ-3)


புலமைப் பரிசில் திட்டம் - 99

போட்டிப் பரீட்சை அனுமதி அட்டைகள்

இம்மாதம் 31 ஆம் திகதி நடைபெற இருக்கும் மேற்படி போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனைத்தும் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இன்று (26-3-99) வரை அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதோர் 28-3-99 க்கு முன் எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

Director,
IIS,
100, Clock tower Rd,
Jaffna

(சி/6904)


## ஒத்திவைப்பு

எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெற இருந்த யாழ். நுகர்வோர் பாதுகாப்புச் சங்கத்தின் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் ஏப்பிரல் 2 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## தடகளப் போட்டி

தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள மெய்வன்மைப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளைதலைமையில் நடைபெறும்.

நாளை மறுதினம் இடம் பெறும் இறுதிப் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனும், சிறப்பு விருந்தினராக மாவட்ட விளையாட்டு அதிகாரி கே. டபிள்யூ. விமலராஜனும் கலந்து கொள்வர். (இ-117)

★ ★ ★

வடமராட்சி வடக்கு இளைஞர் சேவை மன்றத்தின் தடகள விளையாட்டுப் போட்டி நாளையும் நாளை மறுதினமும் பிற்பகல் 2 மணிக்கு புலோலி புற்றளை மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி கலந்து கொள்வார். (இ-109)


எமது ஐங்கரன் ஒறிஜினல் வெளியீடுகள்

- இசைத் தென்றல் VOl. 39
- மாயா
- துள்ளாதமனமும் துள்ளும்
- கள்ளழகர்
- பூவேலி
- ஹவுஸ் புல்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/6916)


## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியம் நடத்தும் வாராந்தக் கருத்தரங்கு நாளை காலை 10 மணிக்கு யாழ். கண்டி வீதியிலுள்ள ஒன்றியப் பணிமனையில் நடைபெறும்.

ஒன்றியத்தின் தலைவர் ப. குகராஜா தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் "தமிழ்ப்பண்பாடு, கலாசாரம் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும்" என்னும் பொருளில் எம். எஸ். ஸ்ரீ தயாளன் கருத்துரை நிகழ்த்துவார். (இ-5)

## மரம் நடும் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ் பிளவத்தை அ. மி. த. க. பாடசாலை சைவநெறித் தொண்டர் கழகம் வடபிராந்திய இந்துப் பேரவையின் ஆதரவுடன் நடத்தும் மரம் நடும் விழாவும், வறிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியும் பாடசாலை மண்டபத்தில் அதிபர் க. நடராசா தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் க. மகேசன், வடபிராந்திய இந்துப் பேரவை அமைப்பாளர் சி. ஆறுமுகசாமி, வலிகாமம் கல்வி வலய சைவ சமயபாட சேவைக்கால ஆலோசகர் ந. சிவசண்முகமூர்த்தி வடபிராந்திய இந்துப் பேரவைசமூகசேவைஇணைப்பாளர் ந. நவரத்தினம், ஆசிரியர் கா. சின்னத்துரை வடபிராந்திய இந்துப் பேரவைத் தலைவர் ப. சந்திரசேகரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

அன்றைய தினம் யோகாசனப் பயிற்சியும் ஆரம்பித்து வைக்கப்படும்

எஸ். சிவரஞ்சன் இதனை ஆரம்பித்து வைப்பார்

[ஐ-6-30]

## 2 மீனவர்கள் குறித்து தகவல் இல்லை

திருகோணமலை நிலாவெளிப் பகுதியில் இருந்து கடந்த திங்கட்கிழமை மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் தொடர்பாக நேற்று வரை தகவல் இல்லை என செஞ்சிலுவைச் சர்வதேச குழு அதிகாரியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிலாவெளியைச் சேர்ந்த ராசதுரை கனகரத்தினம் (வயது 42), வலன்ரைன் பெர்னாண்டோ (வயது 32) ஆகிய இரு மீனவர்கள் குறித்தே தகவல் இல்லை எனக் கூறப்பட்டது. (இ-3)

## நிரந்தர பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஈ. பி. டி. பி, புளொட், ரெலோ அமைப்புக்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பங்கு பற்றினர்.

மாநாட்டில் பங்கு பற்றிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்குக்கான போக்குவரத்துக்கு நிரந்தர கப்பல் சேவையைஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

மன்னாருக்கும் — புங்குடுதீவுக்கும் இடையில் கப்பல் சேவை நடத்தலாம் என்ற யோசனையையும் அவர்கள் முன்வைத்தனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தச் சேவை நடத்த முடியாதுள்ளது என்று பாலபட்டபெண்டி தெரிவித்தார்.

திருமலைக்கும்-காங்கேசன்துறைக்கும் இடையில்நிரந்தர கப்பல் சேவையை நடத்த கேள்விகள் கோரப்பட்டுள்ளன. அந்தக் கேள்விகள் எதிர்வரும் 10 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு இரு கப்பல்கள் பெறப்படும்.

மே மாதத்தில் இந்தச் சேவை ஆரம்பிக்கப்படும்.

அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினால் நடத்தப்படும் இந்தச் சேவைக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வழித்துணையை வழங்கும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வலி-வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இராணுவ விஸ்தரிப்புக்காக காணி சுவீகரிக்கும் முயற்சி குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது.

அந்தத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்று பாலபட்டபெண்டி பதில் அளித்தார்.

இது தொடர்பாக அரசாங்கம் தீர்க்கமானமுடிவு எடுத்து மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று தமிழ் எம். பிக்கள் கோரினர்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் உள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை இயக்கக் கொள்கை அளவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டு அது தொடர்பாக ஆராயக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

இந்த மாநாட்டில் தமிழ் எம். பிக்களால் விடுக்கப்பட்ட ஏனைய முக்கிய கோரிக்கைகள் வருமாறு:

★ யாழ். மாவட்டத்தில் வீதிகளைத் திருத்த கூடுதல் நிதி வழங்கவேண்டும்.

★ காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை தற்போதைய இடத்தில் இருந்து இடமாற்றக்கூடாது.

★ தென்மராட்சி, வடமராட்சியில் 29 ஆயிரம் குடும்பங்களுக்கு வறுமை நிவாரண முத்திரை வழங்க இணக்கம் காணப்பட்டும் 15 ஆயிரம் குடும்பங்களுக்கே தற்சமயம் வழங்கப் படுகின்றது. எஞ்சியவர்களுக்கும் வழங்க வேண்டும்,

★ இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு கூடுதல் உணவு அனுப்ப வேண்டும்;

★ துறைமுக அதிகார சபையால் பொறுப்பேற்கப்பட்டுள்ள பருத்தித்துறை துறைமுகத்தைத் திருத்தி புனரமைக்க வேண்டும்.

[இ-3]

## 1,200 பயணிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

தனர்.

அதே நேரம்— எதிர்வரும் 29 ஆம் திகதி இந்தக் கப்பல் மூலம் மற்றொரு தொகுதி பயணிகள் காங்கேசன் துறைக்கு அனுப்பப்பட உள்ளனர் என திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.


மன்ற அரங்கில் மன்ற அரங்கில்

திருமறைக் கலாமன்றம்
வழங்கும்
தவக்கால ஆற்றுகை

குருதி கழுவிய குவலயம்
(திருப்பாடுகளின் காட்சி)

-- இன்று முதல் மூன்று நாள்கள் --
26, 27, 28 மார்ச் 1999
தினமும் மாலை 6.30 மணி

பிரவேசம்: இலவசம் ஆசனம்: ரூபா 20-00
(ஆசனப்பதிவு இடம்பெறுகின்றது)

★ யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரச அதிபர் பகுதிகளுக்குக் குறித்த தினங்களில் இரவு 10-00 மணி வரை ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது.

தவக்கால ஆற்றுகை சிறப்புற வாழ்த்தும்
ரெலிக்கொம் ஊழியர்கள்
யாழ்ப்பாணம்.
(சி/6907)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-03-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org